## வளர்நிலை - 6

## செயல் வகை

ஔவையார் என்னும் தண்டமிழ்ச் செல்வியை நாம் நன்கறிவோம். அவர் பட்டறிவும் படிப்பறிவும் மிக்கவர். நமக்குப் பயன்படும் செய்திகள் பலவற்றைப் பகிர்ந்துள்ளார். அவற்றுள் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பலாமரத்தின் பூவைக் காண இயலாது; ஆனால் கனியைக் காணலாம்.
மா மரத்தில் பூவைக் காணலாம்; அவ்வாறே கனியையும் காணலாம்.
பாதிரி மரத்தில் பூவைக் காணலாம்; ஆனால் கனியைக் காண முடியாது.
ஏன்? பிஞ்சைக் கூடப் பார்க்க இயலாது. இவைபோல் மக்களுள்ளும் முப்பிரிவினர் உளர்.

சொல்லாமலே செய்பவர்; சொல்லிச் செய்பவர்; சொல்லியும் செய்யாதவர் - என்பவர் ஆவர். மூன்று மரங்களைக் காட்டி மூவகை மக்களை விளக்கிய பாட்டியின் பட்டறிவு பெரிதாகும். வாழ்க அவர் திறமை! அவர் கூறியவாறே நாம் சொல்லாமலே செய்யும் பெரியோராகத் திகழ்தல் வேண்டும்.

சொல்லாமலே எதைச் செய்வது? செய்ய வேண்டிய செயலை மட்டுமே செய்தல் வேண்டும்; செய்ய வேண்டாச் செயலை செய்தல் கூடாது. இதனைத் திருவள்ளுவர்,

**‘செய்தக்க அல்ல செயக்கெடும் செய்தக்க**
**செய்யாமை யானும் கெடும்’**

அதாவது ஒருவன் செய்யக்கூடாததைச் செய்தால் கெடுதி அடைவான். அதேவேளை செய்ய வேண்டியதை செய்ய வேண்டிய காலத்தில் செய்யாத போதும் கெடுதி வந்து சேரும். எனவே சோம்பல் இன்றி செய்ய வேண்டியதை விருப்புடன் செய்து மகிழ்ச்சியாக வாழ்வோம்.
நன்றி,
வணக்கம்.